திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட அலுவலகத்திலுள்ள விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற 2,135 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பரிசுத் தொகையாக மொத்தம் ரூ.43,05,000 வங்கியில் வரவு வைத்து, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தமு.பிரதாப், சட்டமன்ற உறப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் டி.ஜெ.கோவிந்தராஜ், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் திருமதி.பா.உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், அலுவலர்கள், வீரர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! புனிதவதி எத்திராசன் எம்.சி. தலைமையில்

திரு.வி.க.நகரில் முப்பெரும் விழா புகழரங்கம்!

கரு.பழனியப்பன் – கவிஞர்கள் விவேகா – கவிதா ஜவகர் புகழுரை!

சென்னை, செப். 26 - சென்னை கிழக்கு மாவட்ட திமுக வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க.முப்பெரும் விழாவை முன்னிட்டு மாபெரும் புகழரங்கம் - கரு.பழனியப்பன், கவிஞர் விவேகா, கவிஞர்.கவிதா ஜவஹர் ஆகியோர் புகழுரைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில் சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க.முப்பெரும் விழாவை முன்னிட்டு "முப்பெரும் தொடர் 04", விடியல் தந்த சூரிய இயக்கம் ! உழைப்பால் என்றும் சரித்திரம் படைக்கும்!! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் 24-09-25 புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, ஹேம் ராஜ்பவனில் நடைபெற்றது.

இம்மாபெரும் புகழரங்கத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் புனிதவதி எத்திராசன் எம்.சி தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, சரிதா மகேஷ்குமார் எம்.சி, கோ.ஏகப்பன், தேவஜ வஹர், ஜி.எம்.தேவன், இசட் ஆசாத் எம்.சி, வானவிலல் விஜய், லயன்.பி.உதயசங்கர், பி.ஜெ.துளசிங்கம், பெரம்பூர்.ஆர்.மகேஷ் புரசை ஜி. தாமோதரன், எல்.பாண்டுரங்கன் முன்னிலை வகித்தனர்.

வி.க.நகர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள்: தில்லை கதிரவன், புல்லட்சி.ரமேஷ், ஆர்.ராஜன், பி.புவனவதி, கினார் ஆறுமுகம். வி.க.நகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், மாமன்ற உறுப்பினர்கள்: வழக்கறிஞர் மு.சரவணன்எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, தமிழ்ச்செல்வி சசிகுமார் எம்.சி வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் கரு.பழனியப்பன், கவிஞர் விவேகா, கவிஞர்.கவிதா ஜவஹர் ஆகியோர் புகழுரைத்தனர்.

மேலும் இப்புகழரங்கத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, தண்டலம் கிருஷ்ணமூர்த்தி. மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.ரவிசந்திரன், தமிழன்பிரசன்னா, கூ.பீ.ஜெயின், வே.வாசு, பா.ஸ்ரீராமுலு எம்.சி, சுதாதீனதயாளன். ராஜேஸ்வரிஸ்ரீதர். ஜி.வி.நாகவள்ளி எம்.சி, து.ஆயிரம். வி.க நகர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் அ.கோவிந்தன் பி.சுகுமார் த.கருணாநிதி வனஜாசண்முகம் கருணாநிதி. தே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ் எம்.தமிம் வி.க.வெங்கடேசன் எஸ்.சசிகுமார் எஸ்.வெங்கடோன் பா.பி.தாஸ் வி.க.நகர் வடக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வி. ஜெகன் கே.என்.விஜய்(எ]ஸ் வீட்பாபு டி.சீனிவாசன் மதுரைபிரகாசம் எம்.துரைசாமி ஜெ.அண்ணா ரை க.எழிலன் டி.ராஜு பி.இளஞ்செழியன் பி.சத்தீஷ் ஆர்.ராஜராஜன் வ.நாமதேவன் இரா.புருஷோத்தமன் எல்.சுப்பிரமணி அ.விஜயகுமார் வெல்டிங் கஸ்.பாபு வே.து.தாமரைச் செல்வன் நெல்லை.மா.முத்தையா பா.பாபுமனோகரன் கி.நாகலிங்கம் அ.கதிரவன் எச்.திவாகர் ஆர்.பிரகாஷ் சென்னை கிழக்கு மாவட்ட மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ்ஜெயின் எம்.சி, வி.பரிமளம் டி.யோகபிரியாMC எம்.தாவூத்பீ எம்.சி, பி.அமுதாஎம்.சி.ஸ்ரீதணி எம்.சி, எம்.க கமல் எம்.சி, எம்.இ.சேகர் எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி எஸ். உமா எம்.சி. மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள் பா.ஜலபூசனம், எஸ்.கே.சிவகுமார் வி.பிரகாஷ் இ. ஜோஸ்வா ஜெ.சத்திய மோகன் எம்.ஜி.குமாரசாமி அந்தோணி ஜான் இ.என்.கே .வீரமணி ஜெ.வசந்த்கோகுல் இ.விநாயகம் எம்.கமலநாதன் எஸ்.சந்தானராஜ் எஸ்.பிரீத்தி வி.வில்பிரட்ஜான் க.ஞானசேகர் இரா.தனசேகர் இ. எஸ்.ரவிச்சந்திரன் ஆர். தினேஷ் நெடுஞ்செழியன் எஸ்.குப்புசாமி கே.லட்சுமி எஸ்.காதர்மீரான் ஜி.சூரியகுமார் அ.சாக்ரடீஸ் பாபு ருபகாந்தன் எஸ்.சதீஷ்குமார் எல்.ஜான்ரூவில் ஆர்.நிலவழகன் புல்லட்.என்.பாஸ்கர் அ.சேதுராமன் சாவித்திரிஅன் பழகன் கால்கங்கா கோ.சுருணாகரன் எம்.சண்முகவேல் எஸ்.எல்.நாராயணன் எம். எஸ்.மைனர்பாபு, க.ராமமூர்த்தி, கேபிள்.எஸ்.சுரேஷ் சுரேஷ்கோபி எஸ்.சதீஷ்குமார் ஆர்.சீனிவாசன், பி.விவேகானந்தன், ந.தமிழ்மணி ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி எம்.ஜெயயால், சி.எம்.மணி கண்டன், ஆர். கிருஷ்ணவேணி எச்.ஜியாவுதீன் எம்.அருண்குமார் எஸ். வசந்தா அ.சத்யா வி.செந்தில் குமளர் ஜி.ராஜ்குமார் எஸ். ஜெபகுமார், கே.ஹரிபிரசாத் கே.எம்.கார்டன்.சத்தியா Dr. வினோத் இளங்கோ, க. ராஜேந்திரன், ஜெ.அவினாஷ், சி.கௌதம், மு.கௌரி சி.கவிதா ச.மகா சி.சேகர் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி, பரிமளா சுரேஷ் நன்றி கூறினார்கள்.

பல்லாவரம் தொகுதி திரிசூலம் ஊராட்சி பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அந்தந்த துறைகளுடன் வழங்கி தீர்வு கண்டு சான்றிதழ்களும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்பொழுது ஊராட்சி தலைவர் உஷா மாரிமுத்து ஊராட்சி ஒன்றிய மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்தில்

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்!

ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் அறிக்கை

காஞ்சிபுரம், செப். 26 - காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில் இன்று நடைபெறும் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்குகிறார். இந்த முகாமில் கீழ் வரும் ஊராட்சி களைச் சார்ந்த கழக நிர்வாகிகள், பங்கேற்று பொதுமக்களை பயன்பெறச் செய்யுமாறு ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி இன்று (26-09-2025 வெள்ளிக்கிழமை) காலை 9:00மணி அளவில்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் உத்திரமேரூர் அடுத்த மல்லியங்கரணை பிரியா மஹாலில் இதில் நடைபெறுகிறது.

இந்த முகாமில் தளவராம் பூண்டி, பெருங்கோழி , கட்டியாம்பந்தல்,

புலியூர், காரியமங்களம், ஊராட்சிகளுக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு

உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி மக்களின் குறைகளை மனுக்களாக பெற்று கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் முகாமை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்குகிறார்.

இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கோரிக்கை மனுக்களை பெற்று குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்க பெறாத தாய்மார்களுக்கு உடனடியாக தீர்த்து வைக்க உள்ளார்கள்

இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக மாவட்ட ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக அணிகளின் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு உத்திரமேரூர் ஒன்றியச் செயலளார் கெ,.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என். எஸ்.பாரிவள்ளல் ஆகியோர்

அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் 8 கோடியே 10 லட்சம் மதிப்பீட்டில்

மின்சார நிலத்தடி கேபிள் பொருத்தும் பணி!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் செப் 26

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட ஆவடி மாநகரின் மின் தேவைகளை பூர்த்தி செய்ய திருவேற்காடு 110 கிலோ துணை மின் நிலையத்திலிருந்து மேல் வழித்தடமாக கடந்த 20 ஆண்டாக 7.2 கிலோமீட்டர் மீட்டர் தூரம் மீன் வினியாகம் செய்யப் பட்ட நிலையில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் 8 கோடியே 10 லட்சம் மதிப்பீட்டில் மின்சார நிலத்தடி கேபிள் பொருத்தும் பணியை துவக்க விழா நடைபெற்றது இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா. மு. நாசர் தொடங்கி வைத்தார்

இதில் அமைச்சர் பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் சென்னை மேற்கு வட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம் ஆவடி கோட்டம், பட்டாபிராம் உபகோட்டம் காமராஜ் நகர் 33/11கேவி துணை மின் நிலையத்திற்கு திருவேற்காட்டில் இருந்து மேல்வழி தடத்தில் இருந்து, 33 கிலோ வாட் புதை வழி மின் தடமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்/ஆவடி பிரிவிற்கு உட்பட்ட காமராஜ் நகர் துணை மின் நிலையத்தில் இருந்து

சுமார் 7.2 கிலோ மீட்டர் தூரம் 8 கோடியே 10 லட்சம் மதிப்பீட்டில், மக்கள் பயன் பாட்டிற்கு துவக்க வைக்கப் பட்டுள்ளது இதனால் ஆவடி பகுதியில் மின்வெட்டுக்கு பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என தெரிவித்தார்

இதனை தொடர்ந்து ஆவடி அடுத்த பருத்திப் பட்டு பகுதியில் புதிதாக தயாராகி வரும் மின்சாரத் துணை மின் நிலையத்தை ஆய்வு மேற்கொண்டார்

உடன் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார் சென்னை மேற்கு வட்டம்/ மேற்பார்வை பொறியாளர் சித்ரா சௌந்தரபாண்டியன் , ஆவடி மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பகுதி கழக செயலாளர் பேபி சேகர், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், மின்துறை செயற்பொறியாளர் ரேவதி, செயற் பொறியாளர் ஆவடி கூடுதல் பொறுப்பு, நரசிம்மன் உ தவி செயற் பொறியாளர் உதவி பொறியாளர்கள் கார்த்தி கணேஷ் உமின்சார வாரிய ஊழியர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டச் செயலாளர்கள் அவைத்தலைவர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்கள் பங்கு பெற்றனர்.

திருவள்ளூர் தொகுதி பள்ளிப்பட்டு ஒன்றியம் பாண்டறவேடு கிராமத்தில் AGAMT II திட்டத்தின் கீழ் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தை மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து அங்கன்வாடி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினர். உடன் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய செயலாளர் சி.ஜே. சீனிவாசன், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் தானியா, பள்ளிப்பட்டு பேரூராட்சி செயலாளர் சி.ஜே.செந்தில்குமார், ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன், உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

17வது வட்டம் வடபெரும்பாக்கத்தில் காலை சிற்றுண்டி!

ந.ப.கருணாநிதி ஏற்பாட்டில் - ந.பரசுராமன் வழங்கினார்!

சென்னை, செப்.26- பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 17வது வடபெரும்பாக்கத்தில் சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் ந.ப. கருணாநிதி ஏற்பாட்டில், பொதுக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் ந.பரசுராமன் முன்னிலை யில் வடபெரும்பாக்கம், சின்னத்தூக்கும் பகுதியில் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

இதில் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் என்.சந்திரன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.தேவராஜ், பகுதி அவைத் தலைவர் வி.திராவிடவீரன், பகுதி துணை செயலாளர் எஸ். கௌரிசங்கர்லால், வட்ட கழக பிரதிநிதி எஸ்.சுகேந்திரன், கே.ராஜா, பி.என். குமார், வட்ட துணைச் செயலாளர் பி.லதா பிரகாஷ், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஜெ.ஜெய்சங்கர், எம்.எஸ்.ஆர்.சேகர் ராஜன், எஸ்.பார்த்தசாரதி, பகுதி அமைப்பாளர் ஆர்.விஸ்வநாதன் , எம்.ஆசைதம்பி, எ.எஸ்.மாரி, பி.அயோத்தியன், ஜெ.ஹாரி மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 17–வது வட்டத்தில் சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் ந.ப. கருணாநிதி ஏற்பாட்டில், பொதுக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் ந.பரசுராமன் முன்னிலையில் வடபெரும்பாக்கம், சின்னத்தூக்கும் பகுதியில் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதில் என்.சந்திரன், எஸ்.தேவராஜ், வி.திராவிடவீரன், எஸ்.கௌரிசங்கர்லால் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

செப். 30ஆம் தேதிக்குள் வரி செலுத்த

ஞாயிற்றுக்கிழமை அனைத்து வசூல் மையங்கள் செயல்படும்!

சென்னை குடிநீர் வாரியம் தகவல் !

சென்னை, செப்.26-

சென்னை குடிநீர் வாரியத்திற்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய இந்த அரையாண்டிற்கான குடிநீர் / கழிவுநீரகற்று வரி, கட்டணங்கள் மற்றும் நிலுவை தொகையினை செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும்.

வரி செலுத்துவதற்கு ஏதுவாக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் வரும் ஞாயிற்றுக்கிழமை (28.09.2025) காலை 10.30 மணி முதல் மதியம் 01.30 மணி வரை இயங்கும்.

மேலும், நுகர்வோர்கள் https://bnc.chennaimetrowater.in/#/public/cuslogin என்ற வலைதளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக செலுத்தலாம். இசேவை மையங்கள், UPI, வசூல் மையங்களில் உள்ள QR குறியீடு மற்றும் iPoS போன்ற பிற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 30.09.2025 க்குள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்தி மேல்வரியைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறது.

சென்னை வட கிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 10 வது வார்டில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் திட்டப் பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை மற்றும் பட்டா பெற அதிகாரிகளிடம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன்,மனு வழங்கினார். இதில் 10வார்டு செயலாளர் வழக்கறிஞர் எஸ்.தமிழ் செல்வன், அரசு அதிகாரிகள், மற்றும் எஸ்.திருமூர்த்தி, டி.கே.ஜோதி பிரியன், ஏ.ரஜினி தயாளன், ஏ.வி.கிருஷ்ணா சாய், ஏ.எஸ்.கணேஷ் பிரசாத், இ.திருஞானம் எம்.ராஜேந்திரன், எஸ்.ஜெயவேல் மற்றும் பலர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உதவி செய்தனர்.